சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 17.04.2026**

**முன்னிலை**

## திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,
## மாநில தகவல் ஆணையர்

•••••

**வழக்கு எண். SA 1785/E/2024**

திரு.M.Thuyamurthy -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்,
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, பொது அதிகார அமைப்பு
தலைமைச்செயலகம், சென்னை-9.

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர் (பூ.த.),
பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு
மருந்துத் துறை இயக்குநர் அலுவலகம்,
டி.எம்.எஸ். வளாகம், சென்னை-6.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 06.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.K.C.ராஜா, பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை இயக்குநர் அலுவலகம், அண்ணாசாலை, சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 03.03.2026-ல் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 06.01.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல்கள், தொடர்புடைய 1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை, 2.நெடுஞ்சாலைகள் துறை, சென்னை, 3.காவல்துறை, சென்னை, 4.ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, சென்னை, 5.பேரூராட்சிகள் துறை, நகர்புற நிர்வாகத்

துறை, 6. நகராட்சி நிர்வாகம், சென்னை ஆகிய துறைகளிடமிருந்து ஒருங்கிணைந்த பதில்களை பெற்று, பொதுத் தகவல் அலுவலர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் **ந.க.எண்.5935652-5/IHIP/DSP/இரு.2/2023, நாள் 27.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது**.

3. மேலும், இவ்வாணையத்தின் 06.01.2026 தேதியிட்ட உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.இளங்கோவன், பிரிவு அலுவலர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, தலைமைச்செயகம், சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 03.03.2026 அன்று நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு உரிய தகவல்கள் சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெற்று, 27.02.2026 நாளிட்ட பொதுத் தகவல் அலுவலர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையின் 27.02.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாருரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

4. எனவே, ஆணையத்தின் 06.01.2026 தேதியிட்ட உத்தரவின்படி, 27.02.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் கடிதம் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 1785/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்,
மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச்செயலகம், சென்னை-9.

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர் (பூ.த.),
பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை
இயக்குநர் அலுவலகம், டி.எம்.எஸ். வளாகம், சென்னை-6.

**மேல்முறையீட்டாளர்**

திரு.M.Thuyamurthy,
1/1, ஏரிப்பேட்டை, அரசூர் சாலை,
கவரைப்பேட்டை, கும்மிடிப்பூண்டி தாலுகா,
திருவள்ளூர் - 601 206.

Copy to: File MP/PA,